# Canadians For Justice and Equality
# நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனடியர்கள்

நாள் : 3.3.2021

## ஊடக அறிக்கை

உலக நாடுகளின் துணையோடு, இனப்படுகொலையை நிகழ்த்தி முடித்த இலங்கை அரசு, எஞ்சிய எம்மின மக்களை தீவிரவாதிகளாகச் சித்தரிப்புச் செய்கிற படுபாதகச்செயலைத் துவங்கி இருக்கிறது.

இலங்கை அரசின் உளவாளிகளாக, பாவிக்கப்படுகிற கனடாவில் வாழ்கிற ஒரு சில நபர்கள் **(OCPR)** என்கிற அமைப்பின் மூலம் கனடாவில் தனது நயவஞ்சகத்தை அரங்கேற்ற முயலுகின்றனர்.

வருகின்ற மார்ச் 7ஆம் நாளன்று இலங்கை அரசின் கைப்பாவைகளான, திரு.அருண் சித்தார்த், மருத்துவர் முத்துசாமி மலரவன், திரு.அர்சா கோவிந்தா ஆகியோர்களைக் கொண்டு, ஒருங்கிணைப்பு செய்வதாக அறிவிப்பு செய்திருக் கிறார்கள்.

இந்த அமைப்பின் மூலம் நமது கனடாவின் பிரதமர் மதிப்பிற்குரிய ஜஸ்டின் ட்ரூடோ அவர்களின் புகைப்படத்துடன் கூடிய அவருக்கு தொடர்பே இல்லாத, அவதூறான, உண்மைக்குப் புறம்பான, செய்தியொன்றை, சமூக ஊடகங்கள் மூலமாக பரப்பி, எம்மின மக்களுக்கு தேவையற்ற அச்சுறுத்தலையும், நெருக்கடியையும் உண்டாக்கி வருகின்றனர். இந்தச் செய்தியில் உண்மைத் தன்மை என்பது சிறிதளவும் இல்லை.

நமது பிரதமருக்கு தொடர்பே இல்லாத ஒரு செய்தியை, அவர் கூறியதாக, அவரின் புகைப்படத்துடன் காட்டுவது, தண்டனைக்குரிய தேச விரோதச் செயலாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான இச்செயலுக்கு, எங்களின் "நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனடியர்கள்" அமைப்பு தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது .

இந்த தேசவிரோதச் செயலில் தொடர்புடையவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்திடவும், அவர்கள் இச்செயலுக்காக தண்டிக்கப்படவும், வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

320-4936 Yonge St., Ontario, M2N-6S3, Canada
E-mail : romacanada.manoj@gmail.com  Phone : +1 (647) 624-5079